**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6**

**பத்திரிக்கைச் செய்தி**

---

2018–2019ம் ஆண்டு கணினி பயிற்றுநர் (நிலை–1) (முதுகலை ஆசிரியர் நிலை) நேரடி நியமனத்திற்கான அறிவிக்கை (Notification) ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் 01.03.2019 அன்று வெளியிடப்பட்டது. இணையவழித் தேர்வு 23.06.2019 (Computer Based Examination) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அகில இந்திய அளவில் இணையவழியில் நடத்தப்படும் தேர்வுகளில், தேர்வு நாளன்று எதிர்பாராத விதமாக சரிசெய்ய இயலாத அளவில், கணினித் தொழில்நுட்பக் கோளாறு ஏற்படும் நிலையில், அத்தேர்வு மையத்திற்கு மட்டும் தேர்வினை ரத்து செய்து உடனடியாக மறுதேர்வு நடத்துவதற்கு அறிவிப்பு (Re-Schedule) வெளியிடப்படுவது பொதுவாகவே வழக்கத்தில் உள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 23.06.2019ல் நடத்தப்பட்ட கணினி வழித்தேர்வு மையத்தில், தொழில்நுட்ப கோளாறு (Technical Problems) காரணமாக தேர்வில் பங்குகொள்ள இயலாத தேர்வர்கள், மற்றும் தேர்வில் கலந்துகொண்டு முழுமையாக நிறைவு செய்யாத தேர்வர்களுக்கு மட்டும் 27.06.2019ம் நாளன்று ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மறுதேர்வு (Re-Scheduled) நடத்தப்படும் என்பது தெரிவிக்கலாகிறது.

நாள்– 24.06.2019

தலைவர்